# DEPOSITION OF WITNESS

**In the court of Sub Court, Eraniel**
**S.C.No.439/2023**
**Prosecution Witness - PW1**

| | |
|---|---|
| Name | : திரு. விஜிக்குமார். |
| Father's Name | : |
| Age | : |
| Calling | : |
| Village | : |
| Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 02.04.2024.

(A1, A3, A4 are present. A2 is split up in S.C.No.56/2024).

<u>முதல் விசாரணை</u>–

நான் வில்லுக்குறி, சடையப்பர் கோவில் தெருவில் குடியிருக்கிறேன். நான் நாகர்கோவில், தமிழ் நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். 15.06.2018 ம் தேதி மாலை 07.00 மணியளவில் நானும் என் நண்பர் சீனு என்பவரும் வில்லுக்குறி பாலம் அருகில் விநாயகர் கோவில் பக்கத்தில் நின்று பேசிக் கொண்டிருந்தோம். அப்போது எங்கள் ஊரைச் சார்ந்த ஜெயக்குமார், கிருஷ்ணன், ஜெயக்குமார் மகன்கள் ஜெகதீஷ் மற்றும் ஜெயப்பிரகாஷ் ஆகிய அனைவரும் கைலி அணிந்து கொண்டு விநாயகர் கோவில் நோக்கி வந்தார்கள். அப்போது ஜெயக்குமாரின் மகன்கள் இருவரும் வந்த வழியிலேயே நின்றார்கள். ஜெயக்குமாரும் கிருஷ்ணனும் ரோட்டில் வந்து நின்று இரண்டு பக்கமும் அந்தப் பக்கம் இந்தப் பக்கமாக பார்த்தார்கள். அப்போது நான் எதையோ செய்யப் போகிறார்கள் என்று நினைத்தேன். அப்போது ஜெயக்குமார், கிருஷ்ணன் ஆகிய இருவரும் தங்களுக்குள் எதையோ பேசிக் கொண்டு என்னை நோக்கி வந்தார்கள். என்னிடம் வந்து கிருஷ்ணன் அவருடைய கைலிக்குள் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து என்னை ஓங்கி வெட்டினார். அப்போது ஜெயக்குமாரும் ஒரே நேரத்தில் என்னை வெட்டினார். கிருஷ்ணன் போதையில் இருந்ததால் கீழே விழுந்து விட்டார். ஜெயக்குமார் வெட்டிய வெட்டு நான் குனிந்ததால் என் முதுகில் பட்டது. உடனே நான் ரோட்டை கடந்து ஓடும் போது ஜெயக்குமாரின்

மகன்கள் ஜெகதீஷ் மற்றும் ஜெயப்பிரகாஷ் இருவரும் என்னை கொல்லாமல் விடமாட்டோம் என்று அரிவாளை வைத்துக் கொண்டு விரட்டினார்கள். நான் அம்பலத்தடிவிளை, சிவசுடலைமாட கோவில் பக்கமாக தாவிச் சென்று உயிர் தப்பினேன். பிறகு அம்பலத்தடிவிளை ஊரிலிருந்து காவல் துறையினருக்கு தொலைபேசி மூலம் தகவல் சொன்னேன். பிறகு போலீசார் அங்கு வந்து என்னை அழைத்துக் கொண்டு காவல் நிலையம் வந்தார்கள். காவல் நிலையத்தில் நான் புகார் எழுதிக் கொடுத்தேன். பிறகு என்னை போலீசார் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். இது சம்மந்தமாக நான் கொடுத்த புகார் மனு அ.சா.ஆ.1. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)

நான் இப்போது முதல் விசாரணையில் சொன்ன விபரத்தை தான் போலீஸ் விசாரணையிலும் சொன்னேன். புகார் மனுவை நான் தான் எழுதினேன். புகார் மனுவிலும் இப்போது முதல் விசாரணையில் சொன்ன விபரத்தை தான் எழுதிக் கொடுத்தேன். என்னுடைய அப்பா பெயர் இராமச்சந்திரன். எனக்கு சுகுமாறன், செல்லப்பன், மணிகண்டன் என்று மூன்று சித்தப்பாக்கள். சுப்ரமணியன் என்பவர் எனக்கு சித்தப்பா முறை. அவர் எனக்கு தூரத்து சொந்தம். எதிரி ஜெயக்குமாருக்கு நாகராஜன் என்ற ஒரு அண்ணன் உண்டு என்றால் சரிதான். நான், என் தகப்பனார் மற்றும் என் தாயார் சாராயம் விற்றதை எதிரி ஜெயக்குமாரின் அண்ணன் நாகராஜன் காவல் துறையில் காட்டிக் கொடுத்ததால் அவர்கள் மீது எங்களுக்கு விரோதம் என்றால் சரியல்ல. அந்த விரோதத்தால் மேற்படி நாகராஜனை கொலை செய்வதற்கு என் தகப்பனார் அவருடைய கொலையாளிகளுக்கு ரூ.5,00,000/- பணம் கொடுத்தார் என்றால் சரியல்ல. அதிலிருந்து எங்களுக்கு எதிரிகள் மீது பெரிய பகை என்றால் சரியல்ல. என் தகப்பனார் எங்கள் ஊரில் பெரிய ரவுடி என்றால் சரியல்ல. என் தகப்பனாருக்கு இராமச்சந்திரன் என்ற சூக்கையன் இராமச்சந்திரன் என்ற பெயர் உண்டு என்றால் சரியல்ல. எதிரிகள் மீது என் தரப்பில் சுமார் 6 வழக்குகள் கொடுத்துள்ளோம். ஒரு வழக்கில் விசாரணை வரும் போது அதற்கு முன்பும் பின்பும் என் மீது தாக்குதல் நடக்கும். அதற்காக என் தரப்பில் வழக்குகள் கொடுப்போம். நான் நாகர்கோவில், இராணித்தோட்டம் பணிமனையில் வேலை செய்கிறேன். வேறு பணிமனைகளில் பணிபுரிந்தது கிடையாது. நான் கன்னியாகுமரி மாவட்டம் முழுவதும் என்னுடைய இருசக்கர வாகனத்தில் சென்று வருவேன். கன்னியாகுமரி மாவட்டம்

முழுவதும் இருசக்கர வாகனத்தில் சுற்றி வருவோர் போவோரிடம் நகைகளை பறிப்பது வழக்கம் என்றால் சரியல்ல. எதிரிகள் மீது நான் இரணியல் காவல் நிலையம் மற்றும் நித்திரவிளை காவல் நிலையம் ஆகிய இரண்டு காவல் நிலையங்களில் மட்டும் தான் புகார் கொடுத்துள்ளேன். நானும் என் தகப்பனாரும் எதிரிகள் மீது கருங்கல், நித்திரவிளை, இரணியல், குழித்துறை, புதுக்கடை, தக்கலை உட்பட கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அனைத்து காவல் நிலையங்களிலும் பொய் புகார் கொடுத்து வழக்குப் பதிவு செய்ய வைத்துள்ளோம் என்றால் சரியல்ல. வில்லுக்குறி – நாகர்கோவில் ரோட்டில் வடக்குத் தெற்காக ஒரு இரட்டைக்கரை கால்வாய் செல்கிறது என்றால் சரிதான். அந்தக் கால்வாயின் கிழக்கே தெற்கு வடக்காக ஒரு ரோடு செல்கிறது என்றால் சரிதான். அந்த ரோடு சடையப்பர் கோவில் செல்லும் ரோடு என்று சொல்வார்கள் என்றால் சரிதான். அந்த ரோடு சுமார் 40 அடி அகலம் இருக்கும் என்றால் 20 அடி அகலம் இருக்கும். அந்த ரோட்டின் கிழக்கே ரோட்டை ஒட்டி சித்தி விநாயகர் கோவில் உள்ளது என்றால் சரிதான். அந்த கோவிலுக்கு ஒட்டி கிழக்கே ஸ்ரீதேவி காபி பார் உள்ளது என்றால் சரிதான். சித்தி விநாயகர் கோவிலுக்கு நேர் தெற்கே கணேஷ் புரோட்டா கடை உள்ளது என்றால் சரிதான். கணேஷ் புரோட்டா கடைக்கு கிழக்கே அஜய் ஸ்டோர் என்ற கடை உள்ளது என்றால் சரிதான். அதற்கு கிழக்கே சந்திரன் என்பவர் வீடு உள்ளது என்றால் சரிதான். எனவே அந்த இடம் காலை 05.00 மணி முதல் இரவு 09.00 மணி வரை எப்போதும் ஆட்கள் கூட்டம் இருக்கக்கூடிய இடம் என்றால் சரிதான். நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் போது சித்தி விநாயகர் கோவில் அருகில் நின்று கொண்டிருந்தேன். ரோட்டில் ஆற்றங்கரை ஓரமாக நின்று கொண்டிருந்தேன். ஆறு அந்த இடத்தில் இருந்து சுமார் 50 அடிக்கு மேல் உள்ள பாலத்தில் சென்று கொண்டிருக்கிறது என்றால் சரிதான். எதிரிகள் என்னை தாக்கியதாக சொல்லும் போது நிறைய ஆட்கள் அதைப் பார்த்திருப்பார்கள். யார் யார் சம்பவத்தைப் பார்த்தார்கள் என்று நான் போலீஸ் விசாரணையில் சொன்னேன். அருகில் இருந்தவர்களை எல்லாம் விசாரித்து போலீசார் வாக்குமூலம் வாங்கியிருப்பார்கள். 1வது எதிரி பயன்படுத்திய ஆயுதம் வெட்டரிவாள். அதனுடைய வாய் பாகம் கூர்மையாக இருந்தது. அதனுடைய எடை எவ்வளவு இருக்கும் என்று எனக்குத் தெரியாது. சம்பவத்தன்று நான் நீலக்கலர் சட்டையும் நீலக்கலர் பேண்ட்டும் போட்டிருந்தேன். 1வது எதிரி என்னை ஓங்கி தான் வெட்டினார் என்றால் சரிதான். அதில் எனக்கு நிறைய இரத்தம் வந்தது என்றால் கூர்மையான பகுதி மட்டும் பட்டு இரத்தக் கசிவு மட்டும் தான் ஏற்பட்டது. ஆடையில்

இரத்தம் பட்டது. ஆனால் நிறைய படவில்லை. அந்த ஆடைகளை போலீசார் கைப்பற்றவில்லை. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் எதிரிகளை கஷ்டப்படுத்த வேண்டும் என்பதற்காக நானும் என் தகப்பனாரும் சேர்ந்து நகக் கீறல் போல் ஒரு சின்ன காயத்தை ஏற்படுத்திக் கொண்டு போலீசாரை சுவாதீனப்படுத்தி எதிரிகள் மீது பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**

**<u>DEPOSITION OF WITNESS</u>**

**In the court of Sub Court, Eraniel**
**S.C.No.439/2023**
**Prosecution Witness - PW2**

| | |
|---|---|
| Name | : திரு. சுப்ரமணியன். |
| Father's Name | : |
| Age | : |
| Calling | : |
| Village | : |
| Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 02.04.2024.

(A1, A3, A4 are present. A2 is split up in S.C.No.56/2024).

<u>முதல் விசாரணை</u>–

நான் வில்லுக்குறி, சடையப்பர் கோவில் தெருவில் குடியிருக்கிறேன். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனக்கு உறவு முறையில் அண்ணன் மகன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். அவர்கள் எனக்கு ஒரே ஊர்க்காரர்கள் மற்றும் உறவினர்கள். 15.06.2018 ம் தேதி மாலை 06.30 மணியளவில் நான் கடைக்கு போவதற்காக நாகர்கோவிலில் இருந்து திருவனந்தபுரம் செல்லும் ரோட்டில் விநாயகர் கோவிலுக்கு எதிரில் உள்ள கடைக்கு சாமான் வாங்க சென்ற போது சீனு என்பவரும் அ.சா.1 ம் ஆற்றங்கரைக்கு பக்கம் பிள்ளையார் கோவில் அருகில் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் நின்ற இடத்தில் இருந்து 50 அடி தூரத்தில் நான் போகும் போது அங்கு எதிரிகள் ஜெயக்குமாரும், கிருஷ்ணனும் அந்த இடத்தில் பேசிக் கொண்டிருந்தார்கள். நான் ரோட்டைக் கடந்து கடைக்கு போனேன். அப்போது அவனை அரிவாளால் போடு என்று சத்தம் கேட்டது. அப்போது நான் பார்க்கும் போது எதிரி கிருஷ்ணன் அ.சா.1 ஐ வெட்ட முற்பட்டு நிலை தடுமாறி கீழே விழுந்து விட்டார். பிறகு எதிரி ஜெயக்குமார் இரண்டாவதாக அ.சா.1 ஐ முதுகில் வெட்டினார். அதில் அ.சா.1 க்கு முதுகில் காயம் பட்டு இரத்தம் வந்து கொண்டிருந்தது. அப்போது அ.சா.1 ஓடும் போது அ.சா.1 ஐ

எதிரிகள் பிரகாஷ் மற்றும் ஜெகதீஷ் இருவரும் விரட்டிக் கொண்டு போனார்கள். பிறகு நான் கடையில் இருந்து ரோட்டை கடந்து வந்து பார்க்கும் போது சீனுவின் இருசக்கர வாகனம் உடைக்கப்பட்டு கிடந்தது. இரு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)

என் அப்பா பெயர் ஈனன். என் அப்பாவிற்கு 7 பிள்ளைகள். அவர்களுடைய பெயர்கள் கமலம், கோபாலன், பாஞ்சாலி, லீலா, நான், சந்திரன் மற்றும் சரஸ்வதி. அனைவரும் சடையப்பர் கோவில் தெருவில் வசிக்கிறோம் என்றால் சரியல்ல. பெண்கள் திருமணமாகி அவரவர் கணவர் ஊரில் குடியிருக்கிறார்கள். எனக்கு மது அருந்தும் பழக்கம் இருந்தது. ஆனால் தற்போது கடந்த 1. 1/2 ஆண்டுகளாக நான் மது குடிப்பதில்லை. நான் இதற்கு முன்பு ஒரு வழக்கிலும் சாட்சி சொன்னது கிடையாது. நான் மது வாங்கி கொடுத்து காசு கொடுத்தால் நீதிமன்றத்திற்கு பொய் சாட்சி சொல்லப் போவேன் என்றால் சரியல்ல. நான் சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படும் அன்று வீட்டிலிருந்து மாலை 06.30 மணிக்கு கிளம்பினேன். பிள்ளையார் கோவிலில் மாலை 06.30 மணிக்கு மணி அடிக்கும். அதைக் கேட்டு மணி சொல்கிறேன். மாலை 06.00 மணி முதல் 07.00 மணி வரை பிள்ளையார் கோவிலுக்கு ஆண்களும் பெண்களும் சாமி கும்பிட வருவார்கள். நல்ல கூட்டம் இருக்கும். பிள்ளையார் கோவில் அருகில் உள்ள ஸ்ரீதேவி காபி பார், பலசரக்குக் கடை, கணேஷ் ஸ்டோர் ஆகியவற்றில் ஆட்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். அ.சா.1ம் சீனுவும் பிள்ளையார் கோவிலுக்கு இடது பக்கம் நின்றார்கள். எதிரிகள் கிழக்கிலிருந்து வந்தார்கள். எதிரிகள் கிருஷ்ணன் மற்றும் ஜெயக்குமார் இருவரும் கையில் சிறிய கையருவாள் வைத்திருந்தார்கள். அ.சா.1ம் சீனுவும் நின்ற இடத்தில் தெருவிளக்கு இருந்தது. நான் எதிரிகள் கையில் அருவாள் வைத்திருந்ததை மின்விளக்கு வெளிச்சத்தில் பார்த்தேன். மற்ற எதிரிகள் கையில் என்ன ஆயுதங்கள் இருந்தது என்பதை நான் பார்க்கவில்லை. எதிரி ஜெயக்குமார் கையில் இருந்த அரிவாள் 1 1/4 அடி நீளம் இருக்கும். எவ்வளவு எடை இருக்கும் என்று தூரத்தில் இருந்ததால் எனக்குத் தெரியாது. எதிரி ஜெயக்குமார் அ.சா.1ஐ அரிவாளாள் ஓங்கி வெட்டினார். வெட்டு தோள்பட்டையில் குறுக்காக விழுந்தது. எதிரி

ஜெயக்குமார் அ.சா.1 ஐ அ.சா.1 ன் இடதுபுறம் பின்பக்கமாக நின்று வெட்டினார். வெட்டுப் பட்ட இடத்தில் சட்டை கிழிந்து காயம் பட்டு இரத்தம் வந்தது. சட்டையில் இரத்தக் கறை இருந்தது. அ.சா.1 க்கு எத்தனை தையல் போடப்பட்டது என்று எனக்குத் தெரியாது. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தமும் இல்லை என்றாலும் அ.சா.1 என் உறவினர் என்பதால் அவரிடம் பணம் வாங்கிக் கொண்டு பொய் சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**